20.11.2025

O.S.No. 118/2021

PW1– மோகன் சற்குணம் – த/பெ. செல்வராஜ்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.11.2025

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. வா.சா.ஆ.11 ல் சொல்லப்பட்டிருக்கும் முத்துப்பாண்டிசாமி நாடார் மற்றும் இன்பராஜ் பிரதிவாதிகளை குறிக்கும் என்றால் சரிதான். சர்வே எண்.218/1 ஏ, 218/1 எப், 218/2 பி, ஆகிய சர்வே எண்கள் வா.சா.ஆ.11 ஆவணத்தில் பிரதிவாதிக்குரியது என காட்டுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுளள் இராமநாதசெட்டியார் பிராது தபசில் சொத்துக்களுக்கு ஆதிபாத்தியஸ்தர் என்றால் சரிதான். இராமநாத செட்டியாரின் மனைவி பெயர் மீனாட்சியம்மாள் என்றால் சரிதான். மீனாட்சியம்மாளிடமிருந்து பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

2. வா.சா.ஆ.13 ஆவணத்தில் சுப்பிரமணிய செட்டியார் என்பவர் பெயர் துலங்குகிறது என்றால் சாட்சி ஆவணத்தை வாங்கி பார்த்துவிட்டு அது சுப்பிரமணிய செட்டியார் இல்லை, இராமநாத செட்டியார் என கூறினார். வா.சா.ஆ.13,14 ஆவணம் எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் பிராது தபசில் சொத்து ஆதியில் இராமநாதசெட்டியாருக்குதான் பாத்தியப்பட்டது என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டது. வா.சா.ஆ.13,14 ஆவணம் 1884 ம் ஆண்டுசட்டத்தின் கீழ் கடனுக்காகவழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான், மேற்படி கடன் அடைக்கப்பட்டதா இல்லையா என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல, 1969 ம் ஆண்டுவரைதான் வில்லங்கத்தை பார்த்துள்ளேன்.

3. வா.சா.ஆ.15 ஆவணம் 1ம் பிரதிவாதியால் கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணத்தின்படி மாவட்ட வருவாய் அலுவலகத்தில் நாங்கள் ஆஜரானமோ என்றால் ஆஜரானோம், வழக்குநிலுவையில் இருப்பதால் நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளுங்கள் என கூறினர். மேற்படி சங்கதிகள் காட்டும் உத்தரவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. புல எண்.218 சம்பந்தப்பட்ட புலவரைபடத்தை எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் புல எண்.218 ல் எனக்கு இடம் இருப்பது என்பதை காட்டுவதற்கு தாக்கல் செய்தேன். புல எண்.218/5 என்ற இடத்தில் கிணறு உள்ளது என்றால் சரிதான். கிணறு தொடர்பாக எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே தாவா உள்ளது என்றால் எந்த தாவாவும் இல்லை.

5. வா.சா.ஆ.17 ஆவணம் எந்த இடத்துக்கான மின்கட்டண ரசீதுகள் என்றால் புல எண்.219/டி15 ல் உள்ள வடக்குகிணறு, மேற்படி கிணறானது எனது தந்தையின் பெயரில் உள்ளது. புல எண்.219/டி105 ல் உள்ள தெற்குகிணறு எனது சித்தப்பா தனராஜ் பெயரில் உள்ளது. புல எண்.218/டி159 ல் எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட மற்றொரு கிணறு உள்ளது. மேற்படி கிணறுகளில் வாதிக்கு பாத்தியதை இல்லை என்பதை காட்டுவதற்காக வா.சா.ஆ.17 தாக்கல் செய்தேன். மேறப்டி கிணறுகள் சம்பந்தமாக என்னை ஏற்கனவே குறுக்குவிசாரணை செய்துஅதற்கான பதிலையும் கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். 1984ம் ஆண்டிலிருந்து மேற்படி கிணறுகளுக்கு எனது தந்தையின் பெயரில்

தீர்வை செலுத்தப்படுகிறது. ஆனால் வா.சா.ஆ.17 ல் இணைக்கப்பட்டுள்ள மின்கட்டண ரசீதுகள் எனது குறுக்குவிசாரணை முடிந்தபின்பு 26.08.2025 ல் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.17 ஆவணமானது வழக்கிற்கு பின்னிட்டு உரிமையை காட்டுவதற்கு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.